# மரித்தவர்கள் எங்கே இருக்கின்றார்கள்?

## லூக்கா 16:19–31

*"மரித்தவர்கள் எங்கே இருக்கின்றார்கள்?" என்ற கேள்வியானது மக்கள் பலரின் ஆர்வத்திற்கு உரிய ஒரு கேள்வியாக உள்ளது. இதைப் பற்றி நாம் அறிய வேண்டியவைகள் ஏராளமாக உள்ளன: நாம் மரணத்திற்குப் பின் உடனடியாக எங்கு செல்லுவோம்? பிரிந்து சென்ற நமது நண்பர்கள் உணர்வு நிலையில் இருக்கின்றனரா அல்லவா? நமக்கு அன்பானவர்கள், அவர்களின் மரணம் குறித்து நாம் துக்கப்படுவதை அறிகின்றார்களா அல்லவா?[1] இன்னும் பிற. இந்தக் கேள்விகளில் சிலவற்றிற்கு நாம் பதில் அளிக்க இயலாது. அடுத்து வரும் வாழ்வைப் பற்றிய சில விஷயங்களை நம்மிடத்திலிருந்து மறைத்து வைத்தல் என்பது தேவனுடைய சித்தமாக உள்ளது.*

*மரணத்திற்குப் பிந்திய வாழ்வு பற்றிய நமது அறிவை மட்டுப்படுத்துவதில் தேவன் கிருபையுள்ள ஒரு நோக்கம் கொண்டுள்ளார் என்பதில் நான் நிச்சயமாயிருக்கின்றேன். நம்மை விட்டுச் சென்றுள்ள நமக்கு அன்பானவர்கள் நமக்கு அருகில் இருந்து நாம் சொல்வதை அல்லது செய்வதைக் கவனித்துக் கொண்டிருக்கின்றனர் என்பதை நம்புவது சங்கடமானதாக இராதா? தவறாகப் புரிந்துகொள்ள வேண்டாம்: விஷயம் இதுவென்று நான் கூறவில்லை. விஷயம் இதுவாக இருந்தால், நாம் கவனிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றோம் என்று அறிவது நம்மை சங்கடமடையச் செய்யும் என்றே நான் கூறுகின்றேன்.*

*நாம் ஒரு வேளையில் ஒரு உலகத்தில் வாழவேண்டும் என்றே கர்த்தர் அடிப்படையில் விரும்புகின்றார். அடுத்தவரும் வாழ்வின் விவரங்களின்மீது மிக அதிகமாக நாம் வாசம் செய்தால் அது அநேகமாக இந்த வாழ்வின் நடைமுறை விஷயங்களில் நம்மைத் தகுதியற்றவர்களாக்கிவிடும். வரவிருக்கும் உலகம் பற்றிய சில விவரங்களை நம்மிடத்திலிருந்து மறைத்தல் என்பது பிதாவின் சித்தமாயிருக்கிறபடியால் (உபா. 29:29ஐக் காணவும்), நாம் திருப்தியடைந்தவர்களாய், "உம்முடைய சித்தத்தின்படி ஆகக்கடவது" என்று கூறவேண்டும் (மத். 26:42).*

*இருப்பினும், இந்தப் பாடக்கருத்துப் பற்றித் தேவன் வெளிப்படுத்தியுள்ளது என்ன என்பதை அறிந்து கொள்ள நாம் உரிமைகொண்டுள்ளோம். "மரித்தவர்கள் எங்கே இருக்கின்றார்கள்?" என்ற கேள்விக்கு வேதாகம ரீதியான பதிலைக் கண்டறிய நாம், இயேசு கூறிய ஒரு உவமையைப் படிப்போம்:*

*ஐசுவரியமுள்ள ஒரு மனுஷன் இருந்தான்; அவன் இரத்தாம்பரமும் விலையேறப்பெற்ற வஸ்திரமும் தரித்து, அநுதினமும் சம்பிரமமாய் வாழ்ந்துகொண்டிருந்தான். லாசரு[2] என்னும் பேர்கொண்ட ஒரு தரித்திரனும் இருந்தான்; அவன் பருக்கள் நிறைந்தவனாய், அந்த ஐசுவரியவானுடைய வாசலருகே கிடந்து, அவனுடைய மேஜையிலிருந்து விழுந் துணிக்கைகளாலே தன் பசியை ஆற்ற ஆசையாயிருந்தான்; நாய்கள் வந்து அவன் பருக்களை நக்கிற்று. பின்பு அந்தத் தரித்திரன் மரித்து, தேவதூதரால் ஆபிரகாமுடைய மடியிலே கொண்டு போய் விடப்பட்டான்; ஐசுவரியவானும் மரித்து அடக்கம் பண்ணப்பட்டான். பாதாளத்திலே அவன் வேதனைப் படுகிறபோது, தன் கண்களை ஏறெடுத்து தூரத்திலே ஆபிரகாமையும் அவன் மடியிலே லாசருவையும் கண்டான். அப்பொழுது அவன்: தகப்பனாகிய ஆபிரகாமே, நீர் எனக்கு இரங்கி, லாசரு தன் விரலின் நுனியைத் தண்ணீரில் தோய்த்து, என் நாவைக் குளிரப்பண்ணும்படி அவனை அனுப்பவேண்டும்; இந்த அக்கினி ஜுவாலையில் வேதனைப் படுகிறேனே என்று கூப்பிட்டான். அதற்கு ஆபிரகாம்: மகனே, நீ பூமியிலே உயிரோடிருக்குங் காலத்தில் உன் நன்மைகளை அனுபவித்தாய்; லாசருவும் அப்படியே தீமைகளை அனுபவித்தான்: அதை நினைத்துக்கொள். இப்பொழுது அவன் தேற்றப்படுகிறான்; நீயோ வேதனைப்படுகிறாய். அதுவுமல்லாமல் இவ்விடத்திலிருந்து உங்களிடத்திற்குக் கடந்துபோகவும், அவ்விடத்திலிருந்து எங்களிடத்திற்குக் கடந்துவரவும் மனதுள்ளவர்களுக்குக் கூடாதபடிக்கு, எங்களுக்கும் உங்களுக்கும் நடுவே பெரும்பிளப்பு உண்டாக்கப்பட்டிருக்கிறது என்றான்; அப்பொழுது அவன்: அப்படியானால், தகப்பனே, எனக்கு ஐந்துபேர் சகோதரர் உண்டு; அவர்களும் வேதனையுள்ள இந்த இடத்துக்கு வராதபடி, அவன் போய் அவர்களுக்குச் சாட்சியாக அறிவிக்கும்பொருட்டு, நீர் அவனை என் தகப்பன் வீட்டுக்கு அனுப்பும்படி உம்மை வேண்டிக் கொள்ளுகிறேன் என்றான். ஆபிரகாம் அவனை நோக்கி: அவர்களுக்கு மோசேயும், தீர்க்கதரிசிகளும் உண்டு; அவர்களுக்கு அவர்கள் செவிகொடுக்கட்டும் என்றான். அதற்கு அவன்: அப்படியல்ல, தகப்பனாகிய ஆபிரகாமே, மரித்தோரிலிருந்து ஒருவன் அவர்களிடத்திற்குப் போனால் மனந்திரும்புவார்கள் என்றான். அதற்கு அவன்: அவர்கள் மோசேக்கும், தீர்க்கதரிசிகளுக்கும் செவிகொடாவிட்டால், மரித்தோரிலிருந்து ஒருவன் எழுந்துபோனாலும் நம்பமாட்டார்கள் என்று சொன்னான் என்றார் (லூக். 16:19-31).*

இவ்வசனப்பகுதியிலிருந்து பல பாடங்களைப் பெறமுடியும்,[3] ஆனால் இந்தப் பிரசங்கத்தில் ஒரே ஒரு கேள்வியை மாத்திரம் ஆழ்ந்து சிந்திப்போம்: மரித்தவர்களின் நிலைபற்றி இவ்வசனப்பகுதி போதிப்பதென்ன?

சிலர், “ஆனால், இது ஒரு உவமையாக இருப்பதாலும் இது மரணத்திற்குப் பிந்திய வாழ்வு பற்றி மிகச் சரியான சித்தரிப்பைக் கொடுக்காதிருப்பதாலும், நீங்கள் இவ்வசனங்களில் இருந்து எந்த முடிவையும் கொண்டுவர இயலாது” என்று மறுத்துரைக்கலாம். இது ஒரு உவமையாக இருந்தால், இது உவமைகள் பற்றிய பொதுவான மாதிரிக்குப்

பொருந்துவதாக இருப்பதில்லை.[4] எடுத்துக்காட்டாக, இந்தக் கதையில் வரும் பாத்திரங்களில் ஒருவரை இயேசு பெயரிட்டு அழைத்தார்: "லாசரு." நான் அறிந்தவரை, இதை அவர் வேறு எந்த உவமையிலும் செய்யவில்லை. மற்றும், ஒரு ஆவிக்குரிய பாடத்தைப் போதிப்பதற்காக எல்லாருக்கும் பழக்கமான நிகழ்ச்சியைப் பயன்படுத்துதல் என்பதே உவமையின் அடிப்படைக் கருத்தாயிருந்தது. இந்த "உவமையைக்" கேட்டவர்களில் சராசரித் தரமானவர்கள் மரித்தவர்களின் நிலைபற்றி நன்கு அறிந்திருந்தார்களா என்பதில் நான் ஐயப்படுகின்றேன். கிடைக்கின்ற உண்மைகள், இது உவமையாக இருப்பதில்லை, ஆனால் இயேசு தமது செய்தியை விளக்குவதற்காக அவரால் கூறப்பட்ட ஒரு உண்மையான வாழ்க்கை வரலாறாக உள்ளது என்று கருத்துத் தெரிவிக்கும்.[5]

இதற்கு மறுபுறத்தில், இது ஒரு உவமையாக இருக்கிறது என்று நாம் ஒப்புக்கொண்டால் என்னவாகும்? இது, இதன் சத்தியங்களைப் பொறுத்த மட்டில் சிறிதளவு வேறுபாட்டையே ஏற்படுத்தும். "உவமை" என்ற வார்த்தை "கற்பனைக் கதை" என்று அர்த்தப்படுவதில்லை. ஒரு உவமை என்பது உண்மையான வாழ்க்கைச் சூழ்நிலையில் நடைபெற்றதாகவும் அதை ஒரு ஆவிக்குரிய நடைமுறைப் பயன்பாட்டுடன் இணைத்துக் காண்பதாகவும் இருந்தது.[6] லூக்கா 16:19-31 வசனப் பகுதி ஒரு உவமையாக இருக்கிறது என்று நான் நம்புவதில்லை - ஆனால், அது ஒரு உவமையாக இருந்தபோதும், உருவமற்றுப் போகும் ஆவிகளுக்கு என்ன நடக்கிறது என்பதை அது இன்னமும் மிகச் சரியாக விவரிப்பதாக உள்ளது.

ஆகையால், ஐசுவரியவான் மற்றும் லாசரு ஆகியோரின் வரலாற்றை, "மரித்தவர்கள் எங்கே இருக்கின்றார்கள்?" என்ற கேள்விக்குத் தேவனுடைய பதிலில் ஒரு அடிப்படைக் குறிப்பு என்ற வகையில் நாம் பயன்படுத்த முடியும் என்று நான் நம்புகின்றேன்.[7] இவ்வசனப் பகுதியை நாம் ஆராய்கையில், நாம் பல முடிவுகளை அடைவோம்.

## மரித்தவர்கள் ஏதோ ஒரு இடத்தில் இருக்கின்றனர் - மற்றும் உணர்வுடன் இருக்கின்றனர்

"மரித்தவர்கள் எங்கே இருக்கின்றார்கள்?" என்ற கேள்விக்குப் பதில் அளிப்பதற்குச் சிலர், "எங்கும் இல்லை" என்று பதில் அளிப்பார்கள்.[8] இவர்கள், இந்த வாழ்வுக்கு அப்பால் வேறு வாழ்வு எதுவும் இல்லை என்று நம்புகின்றனர். இவர்கள், வாழ்வு என்பது இறுதியான முடிவைக்கொண்ட ஒருவழித் தெரு என்று நம்புகின்றனர். இருப்பினும் லூக்கா 16ம் அதிகாரம் எதையேனும் போதிக்கிறதென்றால், அது மனிதன் கல்லறைக்கு அப்பாலும் வாழ்கின்றான் என்றே போதிக்கிறது.

இந்த வாழ்வுக்கு அப்பால் ஒரு வாழ்வு உள்ளது என்று நம்புகின்ற மற்றவர்கள், மரணத்தில் தனிநபர்கள் இருப்பதிலிருந்து ஒழிகின்றனர் (தேவனுடைய நினைவில் மாத்திரம் "இருக்கின்றனர்") - மற்றும் ஒரு நாளில் ஒரு "உயிர்த்தெழுதல்" இருக்கும் (உண்மையில், ஒரு மறுபிறப்பு எனப்படுகிறது), அந்த வேளையில் நீதிமான்கள் அழியாமையைப்

*பெறுவார்கள், மற்றும் துன்மார்க்கர் நிர்மூலமாவார்கள் என்று போதிக்கின்றனர். ஐசுவரியவானும் லாசருவும் மரணத்தின் வேளையில், இருப்பதிலிருந்து ஒழியவில்லை. இருவருமே வாழ்ந்து கொண்டும் உணர்வுடனும் இருந்தனர்.*

*இங்கு குறிப்பிடப்பட்ட இரு போதனைகளையும் போதிப்பவர்களுடன் நான் கலந்துரையாடியபோது, சில வேளைகளில் "மரணம்" என்ற வார்த்தையைக் கொண்டு ஒரு விளையாட்டு மேற்கொள்ளப்பட்டது. அவர்கள், "மரணத்திற்குப் பின்பு ஆவி வாழ்கிறது என்றால், அங்கு மரணம் நிகழவில்லை என்றாகிறது" என்று கூறுகின்றனர். "மரணம்" என்பதை விளக்கப்படுத்தும்படி நான் அவர்களைக் கேட்கிறேன். அவர்களின் சிந்தைகளில், "மரணம்" என்பது "இல்லாதொழிதல்" என்று அர்த்தப்படுகிறது, ஆனால் அந்த விளக்கத்தைக் கொண்டு பின்வருவதுபோன்ற வசனப்பகுதிகளை ஒப்புரவாக்குவது கடினமாகிறது:*

- *ரோமர் 7:9.* பவுல், *"முன்னே நான் நியாயப்பிரமாணமில்லாதவனாயிருந்தபோது நான் ஜீவனுள்ளவனாயிருந்தேன்; கற்பனை வந்தபோது பாவம் உயிர்கொண்டது, நான் மரித்தவனானேன்" என்று கூறினார். அந்த அப்போஸ்தலர் இருப்பிலிருந்து ஒழிந்துபோனாரா?*
- *கொலோ. 3:3.* பவுல், *"ஏனென்றால், நீங்கள் மரித்தீர்கள், உங்கள் ஜீவன் கிறிஸ்துவுடனே தேவனுக்குள் மறைந்திருக்கிறது" என்றும் எழுதினார். அவரது வாசகர்கள் இல்லாது ஒழிந்தார்களா?*
- *1 தீமோ. 5:6.* மேலும் *அவர், "சுகபோகமாய் வாழ்கிறவள் உயிரோடே செத்தவள்" என்றும் கூறினார். அப்படிப்பட்ட ஒரு பெண் இல்லாது ஒழிவதில்லை.*

*"மரணம்" என்ற வார்த்தையானது அடிப்படையில் ஒரு "பிரிதல்"[9] என்பதை - ஒரு நிலை அல்லது சூழ்நிலையின் முடிவை - குறிக்கிறது மற்றும் இது இல்லாது ஒழிதலைக் குறிப்பிடுவதில்லை.*

*சட்டப்படி, இங்கு குறிப்பிடப்பட்டுள்ள கண்ணோட்டங்களைப் பற்றிக்கொண்டிருப்பவர்கள், ஆத்துமா அல்லது ஆவி என்று அழைக்கப்படக்கூடிய, மனிதனின் அழிவற்ற பாகத்தின் இருப்பை மறுப்பவர்களாக உள்ளனர். "ஆத்துமா என்பது நமக்குள்ளாக இருக்கிற உடல்சார்ந்த வாழ்வைத்தான் குறிக்கிறது" என்று அவர்கள் கூறுகின்றனர். "ஆவி என்பது நமக்குள் தேவன் அருளியுள்ள சுவாசமே தவிர வேறு ஒன்றுமல்ல" என்று அவர்கள் வலியுறுத்துகின்றனர். "ஆத்துமா" என்பதற்குரிய கிரேக்க வார்த்தை (psuche), சுவாசம், உணர்வுகளின் இருப்பிடம் அல்லது ஒரு உயிருள்ள ஜீவி என்பதைக் கூடக் குறிக்கக்கூடும்; ஆனால் அது, "உடலில் இருந்து வேறுபடுகிற மற்றும் மரணத்தினால் கரைக்கப்படக்கூடாத ஒரு சாராம்சம்" என்றும் குறிப்பிடப்படக்கூடும்.[10] அதுபோலவே, "ஆவி" என்பதற்குரிய கிரேக்க வார்த்தை (pneuma) காற்று, சுவாசம் அல்லது உடலை இயங்கச் செய்யும் இன்றியமையாத கொள்கை என்பவற்றைக் குறிக்கக்*

*கூடும், ஆனால் "ஒரு ஆவி என்பது ... ஒரு எளிய சாராம்சமாக, எல்லா அல்லது குறைந்தபட்சம் எல்லா நுண்மையான விஷயத்தையும் தவிர்த்த தாகவும், அறிதல், விரும்புதல், முடிவு செய்தல், மற்றும் செயல்படுதல் ஆகியவற்றிற்கான வல்லமை கொண்டதாகவும் உள்ளது; ... இது உடலை விட்டுப் பிரிந்துள்ள மனித ஆத்துமாவாக உள்ளது."*[11]

*மனிதன் என்பவன் ஒரு இரண்டு மடங்கு ஜீவியாக இருக்கின்றான், உடலானது இருப்பிலிருந்து ஒழியும்போது, ஆத்துமா அல்லது ஆவி தொடர்ந்து வாழ்கிறது என்று பல வேத வசனங்கள் சுட்டிக் காண்பிக்கின்றன. இங்கு ஒரு சில மாதிரி வசனங்கள் தரப்படுகின்றன:*

> *மண்ணானது தான் முன்னிருந்த பூமிக்குத் திரும்பி, ஆவி தன்னைத் தந்த தேவனிடத்திற்கு மறுபடியும் போ[கிறது] (பிர. 12:7).*
>
> *இயேசு அவனை [மனஸ்தாபப்பட்ட கள்ளனை] நோக்கி: இன்றைக்கு நீ என்னுடனேகூடப் பரதீசிலிருப்பாய் என்று மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன் என்றார் (லூக். 23:43).*
>
> *இயேசு: பிதாவே, உம்முடைய கைகளில் என் ஆவியை ஒப்புவிக் கிறேன் என்று மகா சத்தமாய்க் கூப்பிட்டுச் சொன்னார். இப்படிச் சொல்லி ஜீவனை விட்டார் (லூக். 23:46).*
>
> *அப்பொழுது: கர்த்தராகிய இயேசுவே, என் ஆவியை ஏற்றுக் கொள்ளும் என்று ஸ்தேவான் தொழுதுகொள்ளுகையில், அவனைக் கல்லெறிந்தார்கள் (அப். 7:59).*
>
> *ஆனபடியினாலே நாங்கள் சோர்ந்து போகிறதில்லை; எங்கள் புறம்பான மனுஷனானது அழிந்தும், உள்ளான மனுஷனானது நாளுக்கு நாள் புதிதாக்கப்படுகிறது ...*
>
> *பூமிக்குரிய கூடாரமாகிய நம்முடைய வீடு அழிந்துபோனாலும், தேவனால் கட்டப்பட்ட கைவேலையல்லாத நித்திய வீடு பரலோகத்திலே நமக்கு உண்டென்று அறிந்திருக்கிறோம் ... இந்தத் தேகத்திலே குடியிருக்கையில் கர்த்தரிடத்தில் குடியிராதவர்களாயிருக் கிறோமென்று அறிந்தும், எப்பொழுதும் தைரியமாயிருக்கிறோம். நாம் தைரியமாகவேயிருந்து, இந்தத் தேகத்தை விட்டுக் குடிபோகவும் கர்த்தரிடத்தில் குடியிருக்கவும் அதிகமாய் விரும்புகிறோம் (2 கொரி. 4:16-5:8).*

*நாம் நமது ஆவிகளை எங்கே பெற்றோம்? தேவனை "ஆவிகளின் பிதா" என்று வேதாகமம் குறிப்பிடுகிறது (எபி. 12:9). கர்த்தர் "மனுஷனுடைய ஆவியை அவனுக்குள் உண்டாக்குகிற கர்த்தர்" என்று தீர்க்கதரிசியான சகரியா கூறினார் (சக. 12:1).*

*"மரித்தவர்கள் எங்கே இருக்கின்றார்கள்?" என்ற கேள்விக்கு, நாம் முதலில் "அவர்கள் ஏதோ ஒரு இடத்தில் இருக்கின்றனர், மற்றும் அவர்கள் உணர்வுடன் இருக்கின்றனர்" என்று பதில் அளிக்கின்றோம், இருப்பினும் நமது வேத வசனப்பகுதியில் இருந்து கற்றுக்கொள்ள வேண்டியவை இன்னும் அதிகமாக உள்ளன.*

## மரித்தவர்கள் இந்த பூமியில், புதிய உடல்களில் மறு அவதாரம் எடுப்பதில்லை

*மறு அவதாரம் பற்றிய உபதேசமானது, மரித்தவர்களின் ஆத்துமாக்கள் பூமியில் அடுத்தடுத்துப் புதிய வடிவங்களில் அல்லது உடல்களில் திரும்புகின்றன என்ற நம்பிக்கையாக உள்ளது. இது இந்து மதம் மற்றும் பல கிழக்கத்திய மதங்களின் நம்பிக்கையாக உள்ளது. இது போதிக்கப்படுகிற இடங்களில், சிலவேளைகளில், பசுக்கள், குரங்குகள் அல்லது பாம்புகள் என்பவை பரிசுத்தமானவைகள் என்று கருதப் படுகின்றன. இந்த விலங்குகள், மக்களின் முன்னோர்களின் மறு அவதாரங் களாக இருக்கக் கூடும் என்று அவர்கள் நம்புகின்றனர். யூதர்களில் சிலர், மறு அவதாரத்தின் மாறுபட்ட கருத்தைப் பற்றிக் கொண்டிருந்தனர் (மத். 16:13, 14ஐக் காணவும்) - மற்றும், அவ்வப்போது, இந்தக் கருத்தானது மேற்கத்திய உலகத்தில் ஆர்வத்தை உயிர்ப்பித்துள்ளது.*

*ஆயினும், லூக்கா 16ல், ஐசுவரியவானும் லாசருவும் இவ்வுலகத்தில் புதிய வடிவங்களிலோ அல்லது புதிய உடல்களிலோ திரும்பி வந்ததில்லை. அவர்கள் இன்னமும் அவர்களாகவே இருந்தனர், மற்றும் அவர்களின் சூழ்நிலைகள் நிலைவரமானவையாக இருந்தன என்று வேத வசனப்பகுதி வலியுறுத்துகிறது. வசனம் 26, ‘‘அதுவுமல்லாமல் இவ்விடத்திலிருந்து உங்களிடத்திற்குக் கடந்துபோகவும், அவ்விடத்திலிருந்து எங்களிடத்திற்குக் கடந்து வரவும் மனதுள்ளவர்களுக்குக் கூடாதபடிக்கு, எங்களுக்கும் உங்களுக்கும் நடுவே பெரும்பிளப்பு உண்டாக்கப்பட்டிருக்கிறது” என்று கூறுகிறது. உண்மையில், அவர்களில் எவரும், எந்த வடிவத்திற்கும் திரும்ப இயலாது என்று ஆபிரகாம் மறைமுகமாய்க் கூறினார்.*

*மறு அவதாரம் பற்றிய யூகம் செய்யப்பட்ட விஷயங்களின் கதைகளை உணர்வுப்பூர்வமாகப் பத்திரிகைகள் கூறும்போது, நான் அதிகம் உணர் வெழுச்சி அடைவதில்லை. என் வாழ்வில் நான் வேதாகமம் என்ற உரை கல்லைக் கொண்டிருக்கின்றேன் என்பதே இதற்குக் காரணமாக உள்ளது. புதிய கருத்துக்கள் ஆர்வமுள்ளவைகளாக இருக்கக்கூடும், ஆனால் அவற்றிற்கு நான் பின்வரும் சோதனையையே நடைமுறைப் படுத்து கின்றேன்: இது வசனத்தின் போதனையுடன் எவ்வாறு ஒத்திருக்கிறது? மறு அவதாரம் என்பதின் போதனை, வேதாகமத்தில் போதிக்கப்படுவதில்லை என்பதே எளிய சத்தியமாக உள்ளது. சில அடிப்படைக் கொள்கைகளைக் கவனியுங்கள்:*

- *பிர. 3:2. “... இறக்க ஒரு காலமுண்டு [ஒருமைச் சொல்] ...”*
- *எபி. 9:27. “... ஒரே தரம் மரிப்பதும் பின்பு நியாயத் தீர்ப்படைவதும் மனுஷனுக்கு நியமிக்கப்பட் [டுள்ளது].”*
- *பிர. 12:7. பின்பு, “ஆவி தன்னைத் தந்த தேவனிடத்திற்கு மறுபடியும் செல் [லுகிறது]” இது இன்னொரு உடலுக்குள் செல்லுவதில்லை.*
- *2 கொரி. 5:10. “ஏனென்றால், சரீரத்தில் [ஒருமைச்சொல்]*

*அவனவன் செய்த நன்மைக்காவது தீமைக்காவது தக்க பலனை அடையும்படிக்கு நாமெல்லாரும் கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன்பாக வெளிப்பட வேண்டும்.”*

*வேதாகமம் மறு அவதாரம் உபதேசத்தைப் போதிப்பதில்லை. ஆகையால், அது விசுவாசத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட முடியாது (ரோமர் 10:17ஐக் காணவும்). இந்த உபதேசம் தவறானது என்று லூக்கா 16 தெளிவாக்குகிறது.*

## மரித்தவர்கள் தங்கள் கடைசிப் பலனை அடைவதற்கு நேரடியாகச் சென்றிருக்கவில்லை

*மரணத்தின்போது மக்கள் நேரடியாக பரலோகத்திற்கோ அல்லது நரகத்திற்கோ செல்லுவதாகச் சிலர் நினைக்கின்றனர். ஐசுவரியவானும் லாசருவும் (நமது இந்தப் படிப்பில் பிற்பாடு குறிப்பிடப்படவிருக்கிறபடி) அந்த இறுதி நிலைகளை அடைந்திருக்கவில்லை.[12]*

*மரணத்தின்போது மக்கள் தங்கள் கடைசிப் பலன்களுக்கு நேரடியாகச் சென்று விட்டால், இது நியாயத்தீர்ப்பு நாள் பற்றிய வேதாகம போதனையைப் பெருமளவில் செல்லாததாக்கிவிடும். நல்லவர் பொல்லாதவர் யாவரும் நியாயந்தீர்க்கப்படும் நாள் ஒன்று உள்ளது என்று வேதாகமம் போதிக்கிறது (மத். 25:31, 32; யோவா. 16:8; அப். 17:31; எபி. 6:2; 9:27; அப். 24:25ஐக் காணவும்). இந்த நியாயத்தீர்ப்பு கர்த்தருடைய மறு வருகைக்கு முன்னதாக மரிப்பவர்களையும் உள்ளடக்குகிறது (மத். 12:41, 42ஐக் காணவும்). பேதுரு, “கர்த்தர் … அக்கிரமக்காரரை ஆக்கினைக்குள்ளானவர்களாக நியாயத்தீர்ப்பு நாளுக்கு வைக்கவும் அறிந்திருக்கிறார்” என்று எழுதினார் (2 பேது. 2:9). கர்த்தர் மீண்டும் வருகின்றபோது நியாயத் தீர்ப்பு நடைபெறும் என்பதே நியாயத்தீர்ப்பு பற்றி வேதாகம போதனையின் பொதுவான ஒழுங்காயிருக்கிறது, அந்த வேளையில் உயிருடன் இருப்பவர்களும் மரித்தவர்களும் தேவனுக்கு முன்பாக நிற்பார்கள். மரணத்தின்போதே பரலோகத்திலும் நரகத்திலும் வைக்கப்பட்ட மக்கள் நியாயத்தீர்ப்பு நாளன்று தாங்கள் முன்பிருந்த இடத்திற்கே திருப்பி அனுப்பப்படுவதற்காக மாத்திரமே வெளியே கொண்டு வரப்படுவார்கள் என்பது மிகமிக ஏற்பில்லாத கூற்றாக உள்ளது.[13]*

*நீதிமான்கள் தங்கள் பலனை அடைவதற்கு உடனடியாகச் செல்லுகின்றனர் என்று இரண்டு வேத வசனப்பகுதிகள் சுட்டிக்காண்பிக்கின்றன என்பது உண்மையே: கொரிந்தியர்களிடத்தில் பவுல், “நாம் தைரியமாகவேயிருந்து, இந்தத் தேகத்தை விட்டுக் குடிபோகவும் கர்த்தரிடத்தில் குடியிருக்கவும் அதிகமாய் விரும்புகிறோம்” என்று கூறினார் (2 கொரி. 5:8). மீண்டுமாக அந்த அப்போஸ்தலர், “தேகத்தை விட்டுப் பிரிந்து கிறிஸ்துவுடனே கூட இருக்க எனக்கு ஆசையுண்டு” என்று பிலிப்பியருக்கு எழுதினார் (பிலி. 1:23). இருப்பினும், மரணத்தின் முடிவான நிலையைப் பற்றிப் போதிப்பதல்ல ஆனால் அதற்கு மாறாக, மரணம் என்பது*

ஆயத்தமாக இருப்பவர்களுக்கு ஒரு வெற்றியே என்று போதிப்பதே இவ்விரு வசனப்பகுதிகளின் நோக்கமாகும் என்று நான் கருத்துத் தெரிவிக்க விரும்புகின்றேன். மரித்த நீதிமான்கள் கிறிஸ்துவின் அன்பினால் சூழப்பட்டிருப்பார்கள் என்ற கருத்தில் அவர்கள் ''கிறிஸ்துவுடன்'' இருப்பார்கள், ஆனால் இது அவர்கள் நேரடியாகப் பரலோகம் செல்லுவார்கள் என்ற கருத்தில் அமைவதில்லை.[14]

மேலும், பவுல் மரித்தபோது, அவர் "கர்த்தருடன்" இருக்கும்படி கடந்து சென்றார், ஆனால் அவர் இன்னும் பரலோகத்தில் தமது கிரீடத்தைப் பெற்றிருக்கவில்லை. மற்றவர்களுக்கு அன்பை வெளிப்படுத்துகின்றவர்கள் (லூக். 14:12, 13) தாங்கள் மரிக்கின்ற நாளில் அல்ல, ஆனால் உயிர்த் தெழுதலின் நாளில் "பதில் செய்யப்படுவார்கள்" (லூக். 14:14) என்று இயேசு போதித்தார். இயேசு, "... நான் இருக்கிற இடத்திலே நீங்களும் இருக்கும் படி, நான் மறுபடியும் வந்து உங்களை என்னிடத்தில் சேர்த்துக்கொள்வேன்" என்று கூறியபோது (யோவா. 14:3) அவர் தமது இரண்டாம் வருகையை குறிப்பிட்டார் என்ற பெரும்பான்மையான கல்வியாளர்கள் நம்புகின்றனர். பவுல் தமக்கு வைக்கப்பட்டிருந்த நீதியின் கிரீடம் பற்றி, "... நீதியுள்ள நியாயாதிபதியாகிய கர்த்தர் அந்நாளிலே அதை எனக்குத் தந்தருளுவார்; எனக்கு மாத்திரமல்ல, அவர் பிரசன்னமாகுதலை விரும்பும் யாவருக்கும் அதைத் தந்தருளுவார்" என்று எழுதினார் (2 தீமோ. 4:8). "அந்நாளிலே" என்ற சொற்றொடரையும் கிறிஸ்துவின் பிரசன்னமாகுதலை விரும்புகின்ற யாவரும் அதே கிரீடத்தை அதே "நாளிலே" பெறுவார்கள் என்ற உண்மை யையும் கவனிக்கவும். சந்தர்ப்பப் பொருளில், இந்தக் குறிப்பு நியாயத் தீர்ப்பு நாளைப் பற்றியதாக இருக்கவேண்டும்.


பாடத்தின் இந்தப் பகுதி வரையிலும் நான், லூக்கா 16ன் வரலாற்றைப் பற்றிய எனது அணுகுமுறையில் பெரும்பாலும் எதிர்மறையாகவே இருந்துள்ளேன். மரித்தவர்கள் எங்கும் இல்லை, அவர்கள் மாறுபட்ட உடல்களில் பூமிக்குத் திரும்ப வருகின்றனர், மற்றும் அவர்கள் ஏற்கனவே பரலோகத்தில் அல்லது நரகத்தில் இருக்கின்றனர் என்ற பல்வேறுபட்ட கருத்துக்களைப் புறக்கணித்துள்ளோம். ''அப்படியானால் மரித்தவர்கள் எங்குதான் இருக்கின்றார்கள்?" என்ற கேள்வி இன்னமும் நிலைத்துள்ளது. நாம் லூக்கா 16ஐப் பற்றிய அதிகம் நேர்மறையான ஒரு ஆய்வுக்குக் கடந்து செல்லுவோம்.

## மரித்தவர்கள் நியாயத்தீர்ப்புக்காகக் காத்திருப்பவர்களாய் ஒரு இடைப்பட்ட நிலையில் உள்ளனர்

ஆண்டுகளினூடே, சுவிசேஷப் பிரசங்கியார்கள், லூக்கா 16ல் விவரிக் கப்பட்டுள்ள வகையில் காணப்படாத உலகத்தைக் காட்சிப்படுத்துவதற்கு பல்வேறு வகையான வரைபடங்களைப் பயன்படுத்தியுள்ளனர். அப்படிப் பட்ட வரைபடங்கள் யாவும் அவற்றிற்குள்ளேயே கட்டியமைக்கப்பட்ட பலவீனத்தைக் கொண்டுள்ளன, ஏனெனில் அவைகள், காணப்படாத

உலகம் என்பது புவியியல் ரீதியான ஒரு அமைவிடத்தைக் கொண்டுள்ளது என்ற ஒரு தவறான மனப்பதிவை விட்டுச் செல்லுவதாயிருக்கின்றன. காணப்படாத உலகம் அல்லது பாதாளம் என்பது இடம் என்பதை விட அதிகமாக இருப்பு நிலை என்பதாக உள்ளது. இருந்தபோதிலும், இவ்வரலாற்றைச் சித்தரிப்பதற்கு இதை விட மாறுபட்ட சூழ்நிலை எதையும் கவனக்குவிப்பிற்குக் கொண்டுவர எனக்குத் தெரியவில்லை. ஆகையால், லூக்கா 16ல் காணப்படுகிற குறிப்பிடத்தைப் பயன்படுத்துகிற பாதாளம் (காணப்படாத உலகம்) என்ற ஒரு வரைபடத்தைப் பகிர்ந்து கொள்ள என்னை அனுமதியுங்கள்.

இவ்வரைபடத்தின் பல்வேறு பகுதிகளைக் கண்ணோக்குங்கள். முதலாவது மேல் பகுதியில் உள்ள தலைப்பைக் கவனியுங்கள்: "**பாதாளம்** (காணப்படாத உலகம்)." ஐசுவரியவான் "பாதாளத்திலே ... தன் கண்களை ஏறெடுத்து ... கண்டான்" (லூக். 16:23). மரித்தவர்கள் இருக்கும் நிலையை வேதாகமம் "பாதாளம்" என்று குறிப்பிடுகிறது. பாதாளம் என்பதற்குரிய கிரேக்க வார்த்தையான Hades என்பது பழைய ஏற்பாட்டில் உள்ள Sheol என்ற எபிரெய வார்த்தைக்கு ஏறக்குறைய இணையானதாக உள்ளது.[15] Hades என்ற வார்த்தை அடிப்படையில், "காணப்படாத"[16] என்று அர்த்தப் படுகிறது மற்றும் இது மரித்தவர்கள் இருக்கும் "காணப்படாத [உலகத்தை]" நிலையைக் குறிக்கிறது. லூக்கா 16ல் பயன்படுத்தப்பட்ட வகையில் இந்த வார்த்தைக்கான பின்வரும் விளக்கத்தைத் தாயெர் அவர்கள் தருகின்றார்: "உறவினின்று நீங்கிய ஆவிகள் ஏற்றுக்கொள்ளப்படும் பொதுவான நிலை."[17] இன்றைய நாட்களில் "பாதாளம்" என்பது அடிக்கடி "நரகம்"[18] என்பதற்கு மறைமுகமான குறிப்பாகப் பயன்படுத்தப்படுகிறது, ஆனால் நரகம் (gehenna) என்பது மரித்த துன்மார்க்கரின் நித்தியமான நிலையாக உள்ளது, அதே வேளையில் பாதாளம் என்பது (நாம் காணப் போகின்றபடி) மரித்த நல்லவர்கள் மற்றும் தீயவர்கள் யாவரும் இருக்கும் இடைநிலையாக உள்ளது.



*வரைபடத்தை மீண்டும் கண்ணோக்குங்கள். காணப்படாத உலகத்தில் இரண்டு வித்தியாசப்பட்ட பகுதிகள் இருப்பதைக் கவனியுங்கள். ஐசுவரியவான் இவற்றில் ஒரு பகுதியில் இருந்தான்; லாசரு இன்னொரு பகுதியில் இருந்தான். **"பெரும் பிளப்பு"**[19] என்று பெயரிடப்பட்டுள்ள ஒரு பிரிவையும் நீங்கள் கவனிப்பீர்கள். நாம், ஐசுவரியவானின் நிலையிலிருந்து தொடங்கி, ஒவ்வொரு அம்சத்தையும் பெரும் விவரத்துடன் ஆழ்ந்து சிந்திப் போம். "பாதாளத்திலே அவன் வேதனைப்படுகிறபோது, தன் கண்களை ஏறெடுத்து" (லூக். 16:23அ). ஐசுவரியவான் இருந்த நிலையை நான் **"வேதனை"** என்று பெயரிட்டுள்ளேன்.*

***"வேதனை"** என்ற வார்த்தைக்குக் கீழ் நீங்கள் "அல்லது சித்திரவதை" என்ற வார்த்தைகளைக் கவனிப்பீர்கள். இந்தச் சொற்றொடராக்கம் இதே வார்த்தையாக இல்லாவிட்டாலும் இதைப் போன்ற ஒரு நிலையை விவரிக்கிற 2 பேதுரு 2:4ல் இருந்து வருகிறது, இதில் ஐசுவரியவான் தான் இருப்பதைக் கண்டான்: "பாவஞ்செய்த தூதர்களைத் தேவன் தப்ப விடாமல், அந்தகாரச் சங்கிலிகளினாலே கட்டி நரகத்திலே தள்ளி நியாயத் தீர்ப்புக்கு வைக்கப்பட்டவர்களாக ஒப்புக்கொடுத்து." 2 பேதுரு 2:4ல் "நரகம்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள வார்த்தையானது நித்திய தண்டனையைக் குறிக்கும் gehenna என்ற வார்த்தையல்ல, ஆனால்* tartarus[20] *என்ற கிரேக்க வார்த்தையின் ஒரு வடிவமாக உள்ளது. Tartarus என்ற வார்த்தையானது, "பாதாளத்தில் துன்மார்க்கர் அடைக்கப்பட்டு சித்திர வதைப்படுகின்ற பகுதி"யைக் குறிப்பதற்குக் கிரேக்கர்களால் பயன்படுத்தப் பட்டது.*[21] NIV *வேதாகமம், கீழ்ப்படியாத தூதர்கள் "நியாயத்தீர்ப்புக் கென்று வைக்கப்படுவதற்காக அடைக்கப்பட்ட இருளான குகைகள்" என்று இதைக் கூறுகிறது. "நியாயத்தீர்ப்பு" இன்னமும் நடைபெறவில்லை, எனவே இது நியாயத்தீர்ப்பு நாளுக்கு முந்திய ஒரு இடைநிலை என்பதைக் கவனியுங்கள். நான் கூறியபடி, இந்த சூழ்நிலையானது ஐசுவரியவான் அடைக்கப்பட்டிருந்த அதே சூழ்நிலையாக இராவிட்டாலும், அதைப் போன்றதாக உள்ளது.*

*இப்பொழுது லாசருவின் நிலையை நோக்கித் திரும்புவதற்கு என்னை அனுமதியுங்கள்: அவரது நிலையை நான் **"ஆபிரகாமின் மடி"** என்று பெயரிட்டுள்ளேன், ஏனென்றால் ஐசுவரியவான், "தூரத்திலே ஆபிரகாமை யும் அவன் மடியிலே லாசருவையும் கண்டான்" (லூக். 16:23). "ஒருவருடைய மடியில்" இருத்தல் என்பது, நெருங்கிய ஐக்கியத்தையும் உறவையும் மகிழ்வுடன் அனுபவிப்பதற்கு மிகவும் அருகாமையில் இருத்தலாக உள்ளது.*[22] *நியாயத்தீர்ப்புக்காகக் காத்திருக்கும் நீதிமான்களின் நிலை இப்படிப்பட்டதாகவே உள்ளது.*

***"ஆபிரகாமின் மடி"** என்ற வார்த்தைகளுக்குக் கீழ் நான் "அல்லது பரதீசு" என்ற வார்த்தைகளைக் கொடுத்துள்ளேன். இந்தக் குறிப்புப் பெயரானது காணப்படாத உலகத்தினுள் இயேசு தாமே சென்ற பயணத் திலிருந்து வருகிறது. கள்ளனிடம் அவர், "இன்றைக்கு நீ என்னுடனேகூடப் பரதீசிலிருப்பாய்" என்று கூறினார் (லூக். 23:43). "பரதீசு" என்பது "சந்தோஷத்தின் இடம் அல்லது சந்தோஷத்தின் தோட்டம்" என்று*

அர்த்தப்படுகிற ஒரு பெர்ஸிய வார்த்தையாக உள்ளது.[23] வேதாகமத்தில் இவ்வார்த்தை சிலவேளைகளில் பரலோகத்தைக் குறிப்பிடப் பயன்படுத்தப் பட்டுள்ளது (வெளி. 2:7ஐக் காணவும்) - ஆனால் இவ்விடத்தில் விஷயம் அப்படியிருக்க இயலாது, ஏனென்றால் பரதீசில் இயேசு குறுகிய காலம் தங்கியிருந்த பின்பு அவர், தாம் "இன்னும் பிதாவினிடத்திற்கு ஏறிச் செல்ல வில்லை" என்று கூறினார் (யோவா. 20:17). பெந்தெகொஸ்தே நாளன்று பேதுரு தமது பிரசங்கத்தில், இயேசுவின் உடல் கல்லறையில் இருந்தபோது, அவரது ஆவி "பாதாளத்தில்" இருந்தது என்று சுட்டிக்காண்பித்தார் (அப். 2:31).[24] லுக்கா 23:43ஐயும் அப். 2:31ஐயும் ஒன்றாக வைத்துப் பார்க்கையில், இயேசுவின் ஆவியானது காணப்படாத உலகத்தில், "பரதீசு" என்று குறிப்பிடப்படக்கூடிய பகுதியில் இருந்தது என்று நாம் முடிவு செய்கின் றோம். "பரதீசு" என்பது "ஆபிரகாமின் மடியில் இருத்தல்" என்பதற்கு சமமானதாக உள்ளது என்று யூகிப்பது நியாயமானதாக உள்ளது. வேறு வார்த்தைகளில் சொல்லுவதென்றால், இவ்விரு சொற்றொடர்களுமே மரித்த நீதிமான்களின் நிலையை - நியாயத்தீர்ப்புக்குக் காத்திருக்கும் நிலையை - குறிக்கின்றன, ஆனால் இது சமாதானம், சந்தோஷம் மற்றும் பாதுகாப்பு ஆகியவற்றுடன் தொடர்புடைய ஒரு சூழ்நிலையாக உள்ளது.

நியாயத்தீர்ப்புக்கு ஒருவர் காத்திருக்கக் கூடியதில் - சமாதானம் மற்றும் பாதுகாப்புடன் ஒன்றும், பயம் மற்றும் பெருந்துக்கத்துடன் ஒன்றும் என்ற - இரு நிலைகள் உள்ளன என்று கண்டுள்ள நிலையில், நாம் பின்வரும் கேள்வியை எழுப்பலாம்: "ஆனால் நீதிமான்கள் ஏற்கனவே சந்தோஷமாக வும் துன்மார்க்கர் ஏற்கனவே வதைபட்ட நிலையிலும் உள்ளனர் என்றால், நியாயத்தீர்ப்பு நாளின் நோக்கம் என்ன?"[25] இந்த உலகத்திற்கு அப்பால் உள்ள வாழ்க்கை பற்றிய கலந்துரையாடலுக்கான நமது முயற்சியை, இன்னும் பிறவாத இரு குழந்தைகள், கர்ப்பப் பைக்கு வெளியே வாழ்வு எவ்வாறு இருக்கும் என்பதை யூகித்தறியும் விஷயத்துடன் ஒப்பிடப் படுவதை ஒத்துக்கொள்வதில் எனக்கு சம்மதமே. நமது பதில்கள் எப்போதுமே நம்முடைய அறியாமையை வெளிப்படுத்தும். இருப்பினும், இந்தக் கேள்வியின் மீதான சில விளக்கங்கள் இங்கு முறையானவைகளாக உள்ளன. இதற்கு ஒரு பதில் என்பது நியாயத்தீர்ப்பின் நாள் என்பது நியாயத்தீர்ப்பை விதிக்கும் நாளாக இருக்குமே ஒழிய குற்றத்தையும் குற்றமின்மையையும் தீர்மானிக்கும் நாளாக இராது - அந்த நாளில் தேவனு டைய இரக்கமும் நீதியும் முழுமையாகச் செயல்விளக்கப்படுத்தப்படும் என்பதாக இருக்கக் கூடும்.

இருப்பினும் நிறைவான பதில் என்பது, நாம் "வதைப்படுதல்" மற்றும் "ஆபிரகாமின் மடி" என்பவற்றைப் பற்றிப் பேசும்போது, நாம் இடங் களைப் பற்றியல்ல ஆனால் இருத்தலின் நிலைகளைப் பற்றியே பேசுகின் றோம் என்று புரிந்துகொள்வதிலேயே காணக்கிடக்கிறது. அநீதியான ஆத்துமா எங்கிருந்த போதிலும், நியாயத்தீர்ப்பு நாள் அன்று தான் குறைவு படுவதாகக் காணப்படப் போவதை அறியும்போது, காத்திருக்கும்போது அவரை பரிதபிக்கப்படத்தக்கவராக்கும். நீதியுள்ள ஆத்துமா எங்கிருந்த போதிலும், நியாயத்தீர்ப்பு நாளில் அவரைப் பார்த்துத் தேவன், "நல்லது

உண்மையும் உத்தமுமுள்ள ஊழியக்காரனே" என்று கூறுவார் என்பதை அவர் அறிந்திருப்பார் (மத். 25:21அ, 23அ), மற்றும் அவர் காத்திருப்பதில் சந்தோஷமாயிருப்பார்.

பின்வரும் விவரிப்பு உதவிகரமாக இருக்கலாம் அல்லது இல்லாதிருக்க லாம். நீங்கள் ஒரு பயங்கரமான குற்றம் சாட்டப்பட்டு, சந்தேகத்தின் நிழல் எதுவுமின்றி சரியான தீர்ப்பு தரவழைக்கப்படும் என்று அறிந்த நிலையில், விசாரணைக்காகக் காத்திருக்கின்றீர்கள் என்று கற்பனை செய்து கொள்ளுங் கள். நீங்கள் குற்றமற்றவராக இருந்தால், நீங்கள் முற்றிலுமாகத் தெளிவா யிருப்பீர்கள். இந்த நம்பிக்கையுடன் நீங்கள் முழுமையான சந்தோஷம் மற்றும் சமாதானத்தோடு விசாரணைக்காகக் காத்திருப்பீர்கள். இருப்பினும், நீங்கள் குற்றவாளியாக இருந்தால், உங்களுக்கு முன்னால் காத்திருப்பது என்ன என்பதை முழுமையாக அறிந்த நிலையில் பயத்தினால் நிரப்பப் பட்டிருப்பீர்கள். இந்த விவரிப்பு முழுமைத்தன்மையில் இருந்து தூரத்தில் உள்ளது, ஆனால் குறைந்தபட்சமாக இது, கடைசி நியாயத்தீர்ப்புக்கு முன்னதாகவே கூட, மனதின் மாறுபட்ட இரு எண்ணப் போக்குகள் எப்படியிருக்கும் என்பதைக் காண்பிக்கிறது.

எனது வரைபடத்தைச் சிலர் உற்றுப்பார்த்து, ''இது உத்தரிக்கிற ஸ்தலத்தின் கருத்துப் போன்றதாக உள்ளதல்லவா?" என்று கேட்கலாம். இல்லவே இல்லை. உத்தரிக்கிற ஸ்தலத்தின் கருத்து என்பது வேத வசனங் களுக்கு முற்றிலும் அந்நியமானதாக உள்ளது. அவ்வார்த்தை முதலாய் வேதாகமத்தில் காணப்படுவதில்லை.[26] துன்புறுதலின் நிலையில் (உத்தரிப்பு ஸ்தலத்தில்) உள்ள ஆத்துமா ஆசீர்வாதத்தின் நிலைக்குள் (பரலோகத்தினுள்) செல்ல முடியும் என்ற கருத்து உத்தரிப்பு ஸ்தலம் என்ற போதனைக்குள் மறைந்துள்ளது. இதை வேறு விதமாகக் கூறுவதென்றால், மனிதன் தனது மரணத்திற்குப் பின்பும் கூட ''இரண்டாவது வாய்ப்பு'' ஒன்றைப் பெறமுடியும் என்று இந்த உபதேசம் போதிக்கிறது. வரைபடத்தை மீண்டும் கண்ணோக்கி, **"பெரும் பிளப்பு"** என்பதைக் கவனியுங்கள். ஐசுவரிய வானிடத்தில் ஆபிரகாம் "அதுவுமல்லாமல் இவ்விடத்திலிருந்து உங்களிடத் திற்குக் கடந்துபோகவும், அவ்விடத்திலிருந்து எங்களிடத்திற்குக் கடந்து வரவும் மனதுள்ளவர்களுக்குக் கூடாதபடிக்கு, எங்களுக்கும் உங்களுக்கும் நடுவே பெரும் பிளப்பு உண்டாக்கப்பட்டிருக்கிறது" என்று கூறினார் (லூக். 16:26). மரணத்திற்குப் பின் "இரண்டாவது வாய்ப்பு" என்று ஒன்றுமில்லை என்பதாகவே வேதாகமம் போதிக்கிறது:

- வெளி. 2:10. ஒருவர் "மரண பரியந்தம் உண்மையா யிருந்தால்," அவருக்குக் கர்த்தர் "ஜீவ கிரீடத்தைத்" தருவார்.
- 2 கொரி. 5:10. "ஏனெனில் சரீரத்தில் அவனவன் செய்த நன்மைக்காவது தீமைக்காவது தக்க பலனை அடையும் படிக்கு, நாமெல்லாரும் கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன்பாக வெளிப்பட வேண்டும்" - அவர் தமது சரீரத்தை விட்டு வெளியேறிய பின்பு அவருக்காக வேறு யாரேனும் செய்கின்ற செயல்களின்படி அவர் இதை அடைய

மாட்டார்.

- யோவா. 8:21. ஒருவர் தமது பாவங்களில் மரித்தால், அவர் கிறிஸ்து இருக்கும் இடத்திற்குச் செல்ல முடியாது.

## முடிவுரை

''மரித்தவர்கள் எங்கே இருக்கின்றார்கள்?'' என்ற கேள்விக்கு வேதாகமத்தின் பதில் என்று நான் நம்புகின்றதைப் பகிர்ந்து கொள்வதற்கு நான் முயற்சி செய்துள்ளேன். தேவன் நமக்கு இவற்றையே வெளிப்படுத்தத் தேர்ந்து கொண்டுள்ளார். இத்துடன், நாம் நிறைவடைய வேண்டும். நான் இந்தப் பாடத்தை முடிக்கையில், அதிகம் நடைமுறையான மற்றும் அதிகம் தனிப்பட்ட வகையிலான பின்வரும் கேள்வியைக் கேட்க என்னை அனுமதியுங்கள்: அடுத்த ஐந்து நிமிடங்களில் நீங்கள் மரிக்க நேர்ந்தால், நீங்கள் எங்கே இருப்பீர்கள்? அதுவே உங்களை உண்மையில் அக்கறை கொள்ளச் செய்ய வேண்டும்.

கிறிஸ்துவில் விசுவாசம் கொள்ளவேண்டும் (யோவா. 8:24), நமது பாவங்களில் இருந்து மனந்திரும்பவேண்டும் (லூக். 13:3), அவரில் நாம் கொண்டுள்ள விசுவாசத்தை அறிக்கையிடவேண்டும் (மத். 10:32), மற்றும் நமது பாவங்களிலிருந்து மீட்கப்படுவதற்காக தண்ணீருக்குள் முழுக் காட்டப்பட வேண்டும் (மாற். 16:16; அப். 2:38; ரோமர் 6:3-6) என்று கிறிஸ்து நமக்குக் கூறுகின்றார். பின்பு நாம் நமது வாழ்வின் ஒவ்வொரு நாளிலும் அவருடன் நடக்க வேண்டும் (வெளி. 2:10). இவைகளை நீங்கள் செய்துள்ளீர்களா? நீங்கள் நம்பிக்கை மற்றும் கீழ்ப்படிதல் உள்ள வாழ்வை வாழ்கின்றீர்களா? “இல்லை” என்பது உங்கள் பதிலாய் இருந்தால், நீங்கள் கர்த்தருக்குக் கீழ்ப்படிதலை உடனடியாகத் தரவழைக்க வேண்டும் என்று நான் உங்களுக்காக ஜெபிக்கின்றேன். இதை விட முக்கியமானது வேறு ஒன்றுமில்லை!

## குறிப்புகள்

இந்த எடுத்துரைப்பில் ஒரு மூல சிந்தனை உள்ளது என்பதில் நான் ஐயப்படுகின்றேன். நான் நினைவுபடுத்திக் கொள்ளக்கூடிய வரையில், நீண்ட காலமாக இது சற்றே மாறுபாடுகளுடன் விசுவாசமுள்ள சுவிசேஷப் பிரசங்கியார்களால் பிரசங்கிக்கப்பட்டு வருகிறது. எனது ஆதாரமூலங்களை நான் நினைவுபடுத்த முடியவில்லையாதலால், இந்தத் தலைப்பின்மீது பிரசங்கித்துள்ள மற்றும் எழுதியுள்ள யாவருக்கும் நான் ''நன்றிகளை'' தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

பிரசங்கிக்கும் பல சூழ்நிலைகளுக்கு இந்தப் பிரசங்கம் நீண்டதாக உள்ளது என்றாலும், இது, உத்தரிப்பு ஸ்தலம் போன்ற தலைப்புகளை விட்டு விடுவதன்மூலம் இந்தப் பிரசங்கத்தைச் சுருக்க முடியும். இந்த பாடக் கருத்துக்களை ஒரு இரு பகுதிப் பிரசங்கமாக்குவதன்மூலம் அல்லது வகுப்பறைச் சூழலில் எடுத்துரைப்பதன் மூலம் இதை விவரிக்கக்கூடும்.

சமீப காலம் வரை, இந்தப் பிரசங்கத்தின் முடிவு பற்றி சகோதரர்கள்

*சிலரின் மத்தியில் கருத்து ஒருமைப்பாடு இல்லாமை நிலவுவதைப் பற்றி நான் அறியாதிருந்தேன். அவர்கள் - கிறிஸ்துவின் மரணம், அடக்கம், உயிர்த் தெழுதல் ஆகியவை நடைபெற்றதிலிருந்து - மரித்த நீதிமான்கள் யாவரும் நேரடியாகப் பரலோகத்திற்குச் செல்லுவதாக நம்புகின்றனர். அவர்கள் மீதான மரியாதையினிமித்தமாக, "நீதிமானாக மரிப்பவர்கள் நேரடியாகப் பரலோகம் செல்லுகின்றார்களா?" என்ற துணைப் பாடத்தை நான் உள்ளடக்கியிருக்கின்றேன். லூக்கா 16:19-31ல் சித்தரிக்கப்பட்டுள்ள சூழ்நிலை இன்றளவும் உண்மையாக உள்ளது என்று நம்புபவர்கள், இந்தப் புத்தகத்தின் மதிப்புமிக்க இந்தப் பக்கங்கள் வீணடிக்கப்பட்டுள்ளதாக நினைப்பார்கள். இவ்வசனப்பகுதி இன்றைய நாட்களுக்கு நடைமுறைப் படுத்தப்படுவதில்லை என்று நம்புபவர்கள், நான் அவர்களின் விவாதங் களுக்குப் போதுமான அளவு எடுத்துரைத்து பதில் அளிக்கவில்லை என்று நினைப்பார்கள். பிலாத்துவின் வார்த்தைகளைக் கடன் வாங்குவதென்றால், "நான் எழுதினது எழுதினதே" (யோவா. 19:22).*

---

குறிப்புகள்

*[1]மரித்தவர்களின் ஆத்துமாக்களால் நாம் சூழப்பட்டிருக்கின்றோம் என்று போதிப்பதற்குச் சிலர் எபி. 12:1ஐப் பயன்படுத்துகின்றனர். எபி. 12:1-4 வசனப்பகுதி, கிறிஸ்தவ வாழ்வில் நிலைத்திருப்பதற்கு ஒரு ஓட்டப் பந்தயத்தின் ஒப்புவமையைப் பயன்படுத்துகிறது. ஒரு விவரிப்பின் விவரங்களை எடுத்துக்கொண்டு அவற்றில் உள்ள உபதேச நிலைப்பாடுகளை விரிவாக்க அவற்றைக் கருவியாகப் பயன்படுத்தக் கூடாது. [2]லூக்கா 16ன் லாசரு என்பவர் பெத்தானியாவில் வாழ்ந்தவரும் இயேசுவின் நண்பருமாயிருந்த அதே லாசரு அல்ல (யோவா. 11). [3]"கிறிஸ்துவின் வாழ்வு, 4" என்ற புத்தகத்தில் "நரகத்திலிருந்து ஒரு கடிதம்" என்ற பிரசங்கத்தைக் காணவும். [4]லூக்கா 16:19-31 ஒரு உவமையா அல்லவா என்பது பற்றிய கலந்துரையாடலை "கிறிஸ்துவின் வாழ்வு, 4" என்ற புத்தகத்தில் காணவும். [5]இயேசுவின் கருத்தைப் பற்றி, "கிறிஸ்துவின் வாழ்வு, 4" என்ற புத்தகத்தில் "எனக்கு ஒரு கதை சொல்லுங்கள்" என்ற பாடத்தில் காணப்படும் சந்தர்ப்பப்பொருளின் கருத்தைக் காணவும். [6]"உவமை" என்ற வார்த்தை பற்றிய ஒரு கலந்துரையாடலை "கிறிஸ்துவின் வாழ்வு, 3" என்ற புத்தகத்தில் "அவர் அநேக விஷயங்களை உவமைகளாக ... சொன்னர்" என்ற பாடத்தில் காணவும். [7]லூக்கா 16, கிறிஸ்துவின் மரணத்திற்குப் பின்பு அல்ல ஆனால் அவரது மரணத்திற்கு முன்பு மரித்தவர்களின் நிலையை மிகச் சரியாக விவரிக்கிறது என்று நம்புகின்றவர்கள் உள்ளனர். இந்தக் கருத்து நிலைப்பாடு அடுத்து தொடங்குகின்ற "நீதிமானாக மரிப்பவர்கள் நேரடியாகப் பரலோகம் செல்லுகின்றார்களா?" என்ற துணைப்பாடத்தில் கலந்துரையாடப்படுகிறது. [8]இவர்கள், "கல்லறையில்" என்று கூறலாம் - ஆனால் உடலானது சிதையுற்று அதைச் சுற்றியுள்ள மண்ணின் பாகமாவதால், அவர்களின் நிறைவான பதில் "எங்குமில்லை" என்பதாகவே உள்ளது. [9]நமது பாவங்கள் நம்மைத் தேவனிடத்தில் இருந்து பிரிக்கிறபோது (ஏசா. 59:1, 2), நாம் பாவத்தில் மரித்தவர்களாய் இருக்கின்றோம் (எபே. 2:1). ஆவியானது உடலில் இருந்து பிரிகிறபோது நாம் உடல்ரீதியாக மரித்தவர்களாய் இருக்கின்றோம் (யாக். 2:26). மனிதர்கள் நித்தியத்திற்கும் (2 தெச. 1:9) தேவனிடத்தில் இருந்து பிரிக்கப்படுகின்றபோது "இரண்டாம் மரணம்" (வெளி.*

*20:14)* நேரிடுகிறது. [10]C. G. Wilke and Wilibald Grimm, *A Greek-English Lexicon of the New Testament*, trans. and rev. Joseph H. Thayer (Edinburgh, Scotland: T. & T. Clark, 1901; reprint; Grand Rapids, Mich.: Baker Book House, 1977), 677.

[11]Thayer, 520. [12]*கிறிஸ்து சிலுவையில் மரித்தபோது சூழ்நிலை மாறிற்று - ஆகையால், லூக்கா 16 இன்றைய நாட்களுக்கு நடைமுறைப்படுவதில்லை - என்ற நிலைப்பாடு, அடுத்து தொடங்குகின்ற "நீதிமானாக மரிப்பவர்கள் நேரடியாக பரலோகம் செல்லுகின்றார்களா?" என்ற துணைப் பாடத்தில் ஆழ்ந்து சிந்திக்கப்பட்டுள்ளது.* [13]*காணப்படாத உலகம் என்ற கருத்தைப் பற்றி இதே போன்றதொரு மறுப்பு முன் வைக்கப்பட்டுள்ளது. இது இந்தப் பிரசங்கத்தின் பிற்பகுதியிலும் அடுத்து தொடங்குகின்ற "நீதிமானாக மரிப்பவர்கள் நேரடியாகப் பரலோகம் செல்லுகின்றார்களா?" என்ற துணைப் பாடத்திலும் ஆழ்ந்து சிந்திக்கப்படும்.* [14]*இந்தக் கருத்துக்களை நான், அடுத்து தொடங்குகின்ற "நீதிமானாக மரிப்பவர்கள் நேரடியாகப் பரலோகம் செல்லுகின்றார்களா?" என்ற துணைப் பாடத்தில் ஆழ்ந்து ஆராய்வேன்.* [15]*மரித்தவர்கள் நிலைபற்றிப் புதிய ஏற்பாட்டைக்காட்டிலும் குறைவானவைகளே பழைய ஏற்பாட்டில் கூறப்பட்டுள்ளது. Sheol என்ற எபிரெய வார்த்தையானது Hades என்ற கிரேக்க வார்த்தையைக் காட்டிலும் அதிகம் பொதுவான (மற்றும் தெளிவற்ற) வார்த்தையாக உள்ளது. Sheol என்பது பெரும்பாலும் கல்லறையை மாத்திரம் குறிக்கிறது.* [16]Thayer's lexicon has "not to be seen," 11. [17]Thayer, 11. [18]*குழப்பத்தின் ஒரு பகுதியானது அநேகமாக,* KJV *வேதாகமம் Hades என்ற கிரேக்க வார்த்தையை மொழிபெயர்ப்பதற்கு* "hell" *என்ற வார்த்தையைப் பயன்படுத்தியதினால் வந்திருக்கலாம். லூக்கா 16:23ல் விஷயம் இதுவாகவே உள்ளது.* [19]The KJV has "a great gulf" (Luke 16:26). [20]*என்னிடத்தில் உள்ள* Interlinear Bible*ல் உள்ளபடி,* "cast them into hell" *என்ற முழுச் சொற்றொடரும், "[அவர்களை] உபத்திரவத்திற்குள் நியமித்தல்" என்ற நேரடி அர்த்தம் தருகிற ஒரு தனித்த கிரேக்க வினைச் சொல்லில் இருந்து மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.*

[21]*The Analytical Greek Lexicon* (London: Samuel Bagster & Sons Ltd., 1971), 398. [22]*இந்தப் பேச்சுருவகம் அநேகமாக, அந்த நாட்களில் இருந்த உண்ணும் பழக்கத்திலிருந்து தரவழைக்கப்பட்டிருக்கலாம்: விருந்தளிப்பவரின் வலது புறம் (உயர் மதிப்புள்ள இடத்தில்) அமர்ந்திருப்பவர், "அவரது மடியின்"மீது அல்லது மடியில் அமர்ந்திருப்பதாகக் கூறப்பட்டது (யோவா. 13:23, 25; 21:20; யோவா. 1:18ஐக் காணவும்). அமெரிக்காவில், நாங்கள் இந்த உருவகத்தை,* "bosom buddies" *மற்றும்* "in the bosom of friends" *என்ற சொற்றொடர்களைக் கொண்டு இன்னமும் தக்க வைத்துள்ளோம்.* [23]*"பரதீசு" என்ற வார்த்தையை நாம் எவ்வார்த்தையிலிருந்து பெற்றுள்ளோமோ, அவ்வார்த்தை செப்துவஜிந்த் வேதாகமத்தில், ஏதேன் தோட்டத்தைக் குறிப்பிடப் பயன்படுத்தப்பட்டது.* [24]KJV *வேதாகமத்தில்* "hell" *என்றுள்ளது, ஆனால் அப். 2:31ல் Hades என்ற கிரேக்க வார்த்தையின் ஒரு வடிவம் பயன்படுத்தப்பட்டுள்ளது.* [25]*இதைப் பற்றி அதிகமான விஷயங்களை நான், "நீதிமானாக மரிப்பவர்கள் நேரடியாகப் பரலோகம் செல்லுகின்றார்களா?" என்ற துணைப்பாடத்தில் கூறுவேன். இது நம்மில், மரித்தவர்களுக்கு இடைநிலையான ஒரு நிலைப்பாடு உள்ளது என்று நம்பிக்கை கொண்டுள்ளவர்களிடத்தில் கையாளப்பட வேண்டிய பிரச்சனையாக உள்ளது, ஆனால் (நான் வலியுறுத்தப் போகிறபடி) இது, நீதிமான்கள் மரித்தவுடன் பரலோகம் செல்லுகின்றனர் என்று போதிப்பவர்களிடத்தில் இருப்பது போல் நமக்கு இது பெரிய பிரச்சனையாக இருப்பதில்லை.* [26]*உத்தரிப்பு ஸ்தலம் (இது "சுத்திகரித்தல்" என்பதற்கான இலத்தீன் வார்த்தையில் இருந்து வந்ததாகும்) என்பது ரோமன் கத்தோலிக்க உபதேசமாக*

உள்ளது. ஆக்கினைக்குட்பட்டவர்கள் நேரடியாக நரகத்திற்குச் செல்லுகின்றனர் என்றும், ஆனால் விசுவாசித்து "கிருபையின் நிலையில்" மரித்தும் இன்னமும் மன்னிக்கப்படாத பாவங்களுடன் இருப்பவர்கள் உத்தரிப்பு ஸ்தலத்திற்குச் செல்லுகின்றனர் என்றும் அவர்கள் போதிக்கின்றனர். துன்புறுதலின் மூலம் ஆத்துமாக்களைச் "சுத்திகரித்தல்" என்பதே உத்தரிப்பு ஸ்தலத்தின் நோக்கமாக உள்ளது. உயிருடன் இருப்பவர்கள், உத்தரிப்பு ஸ்தலத்தில் இருப்பவர்களின் சார்பாக திருப்பலிகள், ஜெபங்கள், மற்றும் தர்மங்கள் ஆகியவற்றை ஏறெடுக்கும்படி உற்சாகப் படுத்தப் படுகின்றனர் - இவைகள் அவர்களுக்கு அன்பானவர்கள் அந்த பயங்கரமான இடத்தில் இருக்கும் காலத்தைக் குறுகச் செய்யும் என்று கூறப்படுகிறது. இந்த உபதேசமானது ரோமன் கத்தோலிக்க சபைக்கு வருமானத்திற்கான ஒரு சீரான ஆதாரமூலமாக உள்ளது.